**இனிமையான குழந்தைகளே! நீங்கள் படிப்பை ஒருபோதும் தவறவிடக் கூடாது. படிப்பின் மூலம் தான் ஸ்காலர்ஷிப் (உதவி) கிடைக்கின்றது. அதனால் பாபாவின் மூலம் கிடைக்கும் ஞானத்தை கிரகித்துக் கொள்ளுங்கள்.**

கேள்வி: தகுதியான பிராமணர் என்று யாரைச் சொல்வார்கள்? அவர்களின் அடையாளம் சொல்லுங்கள்?

பதில்: 1. யாருடைய வாயில் கீதை ஞானம் மனப்பாடமாக உள்ளதோ, 2. யார் அநேகரைத் தங்களுக்குச் சமமாக ஆக்கிக் கொண்டே இருக்கிறார்களோ, 3. அநேகருக்கு ஞான செல்வத்தின் தான-புண்ணியம் செய்கிறார் களோ, 4. ஒருபோதும் தங்களுக்குள் அபிப்பிராய பேதத்தில் வராதிருக்கிறார்களோ, 5. எந்த ஒரு தேகதாரி மீதும் புத்தி சிக்கிக் கொள்ளாதிருக்கிறதோ, 6. பிராமணன் என்றால் யாரிடம் எந்த ஒரு பூதமும் இல்லாதிருக்கிறதோ, யார் தேக அகங்காரத்தை விட்டு ஆத்ம அபிமானியாக இருப்பதற்கான முயற்சி செய்கிறார்களோ, அவர்கள் தான் தகுதியான பிராமணர்கள் எனப்படுவார்கள்.

ஓம் சாந்தி. பாபா தம்முடைய மற்றும் சிருஷ்டிச் சக்கரத்தின் அறிமுகத்தைக் கொடுத் துள்ளார். இதுவோ குழந்தைகளின் புத்தியில் பதிந்து விட்டுள்ளது-சிருஷ்டிச் சக்கரம் அப்படியே ரிப்பீட் ஆகின்றது. எப்படி நாடகத்தை உருவாக்குகிறார்கள், மாடல்களைத் தயார் செய்கிறார்கள், பிறகு அது ரிப்பீட் ஆகிறது, அதுபோல. குழந்தைகளாகிய உங்கள் புத்தியில் இந்தச் சக்கரம் சுற்ற வேண்டும். உங்களுடைய பெயரும் கூட சுயதரிசனச் சக்கரதாரி. ஆக, அது புத்தியில் சுற்ற வேண்டும். பாபா மூலம் கிடைத்துள்ள ஞானத்தை கிரகித்துக் கொள்ள வேண்டும். கடைசியில் பாபா மற்றும் படைப்பினுடைய முதல்-இடை-கடை பற்றி நினைவு இருக்குமாறு கிரகித்தல் இருக்க வேண்டும். குழந்தைகள் மிக நல்லபடியாகப் புருஷார்த்தம் செய்ய வேண்டும். இது படிப்பாகும். குழந்தைகள் அறிவார்கள், இந்தப் படிப்பை பிராமணர்களாகிய உங்களைத் தவிர வேறு யாரும் அறிந்திருக்கவில்லை. வர்ணங்களின் வேறுபாடோ உள்ளது இல்லையா? மனிதர்கள், நாம் அனைவரும் சேர்ந்து ஒன்றாகி விட வேண்டும் என நினைக்கின்றனர். இப்போது இந்த உலகம் முழுவதும் ஒன்றாக ஆக முடியாது. இங்கே முழு உலகத்திலும் ஒரே இராஜ்யம், ஒரே தர்மம், ஒரே மொழி வேண்டும். அதுவோ சத்யுகத்தில் இருந்தது. உலகத்தின் இராஜ்யம் இருந்தது. அதன் எஜமானர்களாக இந்த இலட்சுமி-நாராயணர் இருந்தனர். உலகத்தில் சாந்தியின் இராஜ்யம் இது தான் என்பதை நீங்கள் அனைவருக்கும் சொல்ல வேண்டும். இது பாரதத்தின் விஷயம் மட்டுமே. எப்போது அவர்களின் இராஜ்யம் இருக்கிறதோ, அப்போது முழு உலகத்திலும் சாந்தி ஏற்பட்டு விடுகின்றது. இதை உங்களைத் தவிர வேறு யாரும் அறிந்திருக்கவில்லை. அனைவரும் பக்தர்கள். வேறுபாட்டையும் நீங்கள் பார்க்கிறீர்கள். பக்தி வேறு, ஞானம் வேறு. பக்தி செய்யா விட்டால் ஏதாவது பூதம்-பேய் விழுங்கி விடும் என்பதெல்லாம் கிடையாது. நீங்களோ பாபா வினுடையவர்களாக ஆகியிருக்கிறீர்கள். உங்களுக்குள் என்னென்ன பூதங்கள் உள்ளனவோ, அவை யனைத்தும் வெளியேற வேண்டும். முதல் நம்பர் பூதமாக தேக அகங்காரம் உள்ளது. இதை வெளி யேற்றுவதற்காகத் தான் பாபா

ஆத்ம அபிமானியாக ஆக்கிக் கொண்டே இருக்கிறார். பாபாவை நினைவு செய்தால் எந்த ஒரு பூதமும் முன்னால் வராது. 21 பிறவிகளுக்கு எந்த ஒரு பூதமும் வராது. இந்த 5 பூதங்கள் இராவண சம்பிரதாயத்தினுடையவை. இராவண இராஜ்யம் எனச் சொல் கின்றனர். இராமராஜ்யம் வேறு, இராவண இராஜ்யம் வேறு. இராவண இராஜ்யத்தில் பிரஷ்டாச்சாரிகளும் இராம ராஜ்யத்தில் சிரேஷ்டாச்சாரிகளும் இருப்பார்கள். இந்த வேறுபாடும் உங்களைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. உங்களிலும் யார் புரிந்து கொண்ட சாமர்த்திய சாலிகளாக உள்ளனரோ, அவர்கள் நல்லபடியாகப் புரிந்து கொள்ள முடியும. ஏனென்றால் மாயாவாகிய பூனையும் குறைந்ததல்ல. அவ்வப்போது படிப்பை விட்டுவிடு கின்றனர். சென்டருக்கு வருவதில்லை. தெய்விக குணங்களை தாரணை செய்வதில்லை. கண்களும் கூட ஏமாற்றி விடுகின்றன. ஏதாவது நல்ல பொருளைக் கண்டால் சாப்பிட்டு விடுகின்றனர். ஆக, இப்போது பாபா புரிய வைக்கிறார், குழந்தைகளாகிய உங்களுக்கு இது (இலட்சுமி-நாராயணன்) நோக்கம் மற்றும் குறிக்கோளாகும். நீங்கள் இவர்களைப் போல் ஆக வேண்டும். அதுபோல் தெய்வீக குணங்களை தாரணை செய்ய வேண்டும். அங்கே இராஜா-ராணி போலவே பிரஜைகள் அனைவரிடமும் தெய்வீக குணங்கள் இருக்கும். அங்கே அசுர குணங்கள் இருப்பதில்லை. அசுரர்கள் இருப்பதில்லை. பிரம்மாகுமார்-குமாரிகளாகிய உங்களைத் தவிர வேறு யாரும் இந்த விஷயங்களைப் புரிந்து கொள்வதில்லை. உங்களுக்கு சுத்த அகங்காரம் உள்ளது. நீங்கள் ஆஸ்திகர் ஆகியிருக்கிறீர்கள். ஏனென்றால் இனிமையிலும் இனிமையான ஆன்மீகத் தந்தையினுடையவர்களாக ஆகியிருக் கிறீர்கள். இதையும் அறிவீர்கள், எந்த ஒரு தேகதாரியும் ஒருபோதும் இராஜயோகத்தின் ஞானத்தை அல்லது நினைவு யாத்திரையைக் கற்றுத் தர இயலாது. ஒரு தந்தை தான் கற்றுத் தருகிறார். நீங்கள் கற்றுக் கொண்டு பிறகு மற்றவர்களுக்குக் கற்றுத் தருகிறீர்கள். உங்களிடம் கேட்பார்கள், உங்களுக்கு இதை யார் கற்றுத் தந்தார்? என்று உங்கள் குரு யார்? ஏனென்றால் ஆசிரியரோ ஆன்மீக விஷயங்களைக் கற்றுத் தருவ தில்லை. இதையோ குரு தான் கற்பிக்கிறார். இதைக் குழந்தைகள் அறிவார்கள் - நமக்கு குரு கிடையாது. நமக்கு சத்குரு உள்ளார். அவர் சுப்ரீம் (மிக மேலானவர்) எனச் சொல்லப்படுகிறார். டிராமாவின் படி சத்குரு தாமே வந்து அறிமுகம் தருகிறார். மேலும் அவர் என்னென்ன சொல்கிறாரோ, அவையனைத்தும் சத்தியமான வற்றையே புரிய வைக்கிறார். மேலும் உண்மையான கண்டத்திற்கு அழைத்துச் செல்கிறார். சத்தியமானவர் ஒருவர் தான். மற்ற தேகதாரி யாரையாவது நினைவு செய்வது பொய்யாகும். இங்கே நீங்கள் ஒரு தந்தையை மட்டுமே நினைவு செய்ய வேண்டும். எப்படி ஆத்மாக்கள் அனைவரும் ஜோதி பிந்து வாக உள்ளனரோ, அதுபோல் பாபாவும் ஜோதி பிந்துவாக இருக்கிறார். மற்றப்படி ஒவ்வோர் ஆத்மா வின் சம்ஸ்காரமும் கர்மமும் அவரவர்க்குரியதாக இருக்கும். ஒரே மாதிரி சம்ஸ்காரங்கள் இருக்க முடியாது. ஒரே மாதிரியான சம்ஸ்காரங்கள் இருக்குமானால் பிறகு உடலமைப்பும் ஒரே மாதிரி தான் இருக்கும். ஒருபோதும் ஒரே மாதிரி தோற்ற அமைப்பு இருக்க முடியாது. கொஞ்சம் வேறுபாடு நிச்சயமாக இருக்கும்.

இந்த நாடகமோ ஒன்று தான். சிருஷ்டியும் ஒன்று தான். அநேகமல்ல. மேலே-கீழே எல்லாம் உலகங்கள் இருப்பதாகச் சொல்வது பொய்யாகும். மேலே நட்சத்திரங்களில் உலகம் இருப்பதாகச் சொல்கின்றனர். பாபா கேட்கிறார், இதை யார் சொன்னது? அப்போது சாஸ்திரங்களின் பெயர் சொல்கின்றனர்.

சாஸ்திரங்களோ நிச்சயமாக யாரேனும் மனிதர்கள் தாம் எழுதியிருப்பார்கள். நீங்கள் அறிவீர்கள், இதுவோ உருவாக்கப் பட்ட ஒரு விளையாட்டு. விநாடிக்கு விநாடி எது முழு உலகத்தின் பாகமாக நடைபெறுகின்றதோ, இதுவும் டிராமாவின் உருவாக்கப் பட்ட ஒரு விளையாட்டாகும். குழந்தைகளாகிய உங்கள் புத்தியில் பதிந்துள்ளது-இந்தச் சக்கரம் எப்படிச் சுற்றுகிறது, மனிதர்கள் அனைவரும் எப்படி அவர்களின் பாகத்தை நடிக்கின்றனர்? பாபா சொல்லி யிருக்கிறார், சத்யுகத்தில் உங்களுடைய பாகம் மட்டுமே இருக்கும். பாத்திரத்தை நடிப்பதற்காக வரிசைக்கிரமமாக வருகிறீர்கள். பாபா எவ்வளவு நன்றாகப் புரிய வைக்கிறார்! குழந்தைகளாகிய நீங்கள் பிறகு மற்றவர்களுக்குப் புரிய வைக்க வேண்டியுள்ளது. பெரிய-பெரிய சென்டர்கள் திறந்து கொண்டே இருக்கும். அப்போது பெரிய-பெரிய மனிதர்கள் அங்கே வருவார்கள். ஏழைகளும் வருவார்கள். அதிகமாக ஏழைகளின் புத்தியில் உடனே பதியும். பெரிய-பெரிய மனிதர்கள் வரத்தான் செய்கிறார்கள். ஆனால் வேலை இருந்து விட்டாலோ நேரமில்லை என்று சொல்வார் கள். உறுதிமொழி எடுத்துக் கொள்கின்றனர், நாங்கள் நல்லபடியாக படிப்போம் என்பதாக. பிறகு படிக்கவில்லை என்றால் வெளியில் தள்ளப் படுகிறார்கள். மாயா இன்னும் தன் பக்கமாகக் கவர்ந்து இழுத்து விடுகின்றது. அநேகக் குழந்தைகள் படிப்பதை நிறுத்தி விடுகின்றனர். படிப்பைத் தவற விடுவார்களானால் நிச்சயமாக ஃபெயிலாகி விடுவார்கள். பாடசாலையில் படிக்கும் நல்ல-நல்ல குழந்தைகள் திருமணங்களுக்கு அல்லது இங்கே அங்கே செல்வதற்கென்று விடுமுறை எடுத்துக் கொள்ள மாட்டார்கள். புத்தியில் உள்ளது, நாம் நல்லபடியாகப் படித்து ஸ்காலர்ஷிப் பெறுவோம் என்று. அதனால் படிக்கின்றனர். படிப்பைத் தவற விடுவதற்கான சிந்தனை செய்ய மாட்டார்கள். அவர்களுக்குப் படிப்பைத் தவிர வேறெதுவும் இனிமையாகத் தோன்றாது. தேவை யின்றி நேரம் வீணாகி விடும் என்பதைப் புரிந்து கொண்டுள்ளனர். இங்கே ஒரே ஓர் ஆசிரியர் தான் படிப்பு சொல்லித் தருபவர். அதனால் ஒருபோதும் படிப்பைத் தவறவிடக் கூடாது. இதிலும் கூட நம்பர்வார் புருஷார்த்தத்தின் அனுசாரமே உள்ளனர். பார்க்கின்றார், படிப்பவர்கள் நன்றாகப் படிக்கின்றனர் என்றால் கற்றுத் தருபவருக்கும் மனம் ஈடுபட்டிருக்கும். ஆசிரியரின் பெயர் பிரசித்தி பெறும். கிரேடு கூடும். உயர்ந்த பதவி கிடைக்கும். இங்கேயும் கூட குழந்தைகள் எவ்வளவு படிக்கிறார்களோ, அவ்வளவுக்கு உயர்ந்த பதவி பெறுவார்கள். ஒரே வகுப்பில் சிலர் படித்து உயர்ந்த பதவி பெறுகிறார்கள். சிலர் குறைந்த பதவி பெறுகிறார்கள். அனைவருடைய வருமானமும் ஒரே மாதிரி இருக்காது. புத்தியின் ஆதாரத்தில் தான் உள்ளது. அவர்களோ, மனிதர்கள் மனிதர்களுக்குக் கற்றுத் தருகிறார்கள். நீங்கள் அறிவீர்கள், எல்லையற்ற தந்தை நமக்குக் கற்றுத் தருகிறார் எனும்போது நல்லபடியாகப் படிக்க வேண்டும். கவனக்குறைவு இருக்கக் கூடாது. படிப்பை விட்டுவிடக் கூடாது. ஒருவர் மற்றவருக்கு துரோகியாகவும் ஆகி விடுகின்றனர், தலைகீழான விஷயங்களை யெல்லாம் சொல்வதன் மூலம். மற்றவர்களின் வழிமுறைப்படி நடக்கக் கூடாது. ஸ்ரீமத் பற்றி யார் என்ன சொன்னாலும் சரி, உங்களுக்கோ நிச்சயம் உள்ளது - பாபா நமக்குப் படிப்பு சொல்லித் தருகிறார். பிறகு அந்தப் படிப்பை விட்டுவிடக் கூடாது. குழந்தைகள் நம்பர்வார் உள்ளனர். தந்தையோ முதல் நம்பர். இந்தப் படிப்பை விட்டு வேறு எங்கே செல்வார்கள்! வேறு எங்குமே இந்தப் படிப்பு கிடைக்காது. சிவபாபாவிடம் படிக்க வேண்டும். வியாபாரமும் சிவபாபாவிடம் செய்ய வேண்டும். சிலர் தலைகீழான விஷயங்களைச் சொல்லி மற்றவர் முகத்தைத் திருப்பி விடுகின்றனர். இந்த

பேங்க் சிவபாபாவினுடையதாகும். வெளியில் யாராவது சத்சங்கம் ஆரம்பிப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். நாம் சிவபாபாவின் பேங்கில் சேமிக்க வேண்டும் எனச் சொல்கிறார்கள். எப்படிச் செய்வார்கள்? இங்கே வருகின்ற குழந்தைகள் சிவபாபாவின் உண்டிய-ல் போடுகின்றனர். ஒரு பைசா கொடுக்கிறார்கள் என்றாலும் கூட அது நூறு மடங்காக ஆகிக் கிடைக்கின்றது. சிவபாபா சொல்கிறார், உங்களுக்கு இதற்குப் பதிலாக மாளிகைகள் கிடைக்கும். இந்தப் பழைய உலகம் முழுவதும் அழிந்துவிடப் போகின்றது. செல்வந்தர்கள் நல்ல-நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்களெல்லாம் அநேகர் வருகின்றனர். எங்களுக்கு சிவபாபாவின் களஞ்சியத்திலிருந்து பாலனை கிடைப்பதில்லை என்று யாரும் சொல்வதில்லை. அனைவருக்கும் பாலனை நடைபெற்றுக் கொண்டிருக் கின்றது. சிலர் ஏழை களாக உள்ளனர். சிலர் பணக்காரர்களாக உள்ளனர். பணக்காரர்களைவிட ஏழைகள் நல்ல பாலனை பெறுகின்றனர். இதில் பயப்படுவதற்கான விஷயம் கிடையாது. நாம் பாபாவுடையவர் களாக ஆகிவிட வேண்டும் என அநேகர் விரும்புகின்றனர். ஆனால் அதற்கான தகுதி உள்ளவர் களாகவும் இருக்க வேண்டும். ஆரோக்கியமும் வேண்டும். ஞானமும் கொடுக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். அரசாங்கமும் அதிகம் சோதித்துக் கொண்டிருக்கிறது. இங்கேயும் அனைத்தும் பாôக்கப் படுகின்றது. சேவை செய்ய முடியும். நம்பர்வாரோ இருக்கவே செய்கின்றனர். அனைவரும் அவரவர் புருஷார்த்தத்தைச் செய்து கொண்டிருக்கின்றனர். சிலர் நன்றாகப் புருஷார்த்தம் செய்து-செய்து பிறகு வராமல் போய் விடுகின்றனர். காரணத்தோடோ அல்லாமலோ வருவதை நிறுத்தி விடுகின்றனர். பிறகு ஆரோக்கியமும் அப்படி ஆகி விடுகின்றது. சதா ஆரோக்கியமானவராக ஆக்குவதற்காக இவையனைத்தும் கற்பிக்கப்படுகின்றது. யாருக்கு ஆர்வம் உள்ளதோ, நினைவினால் தான் நம்முடைய பாவங்கள் நீங்கும் என்பதை யார் உணர்ந்திருக் கிறார்களோ, அவர்கள் நல்லபடியாகப் புருஷார்த்தம் செய்வார்கள். சிலரோ வீணாக நேரத்தைப் போக்கிக் கொண்டிருக்கின்றனர். தங்களைத் தாங்களே சோதித்துப் பார்க்க வேண்டும். பாபா புரிய வைக்கிறார் - கவனக்குறைவாக இருந்தால் அது தெரிந்து விடும்-இவர்கள் யாருக்கும் கற்பிக்க முடியாது என்று.

பாபா சொல்கிறார், 7 நாள்களில் நீங்கள் தகுதியுள்ள பிராமணர்-பிராமணி ஆகிவிட வேண்டும். வெறுமனே பெயரளவில் பிராமணர்-பிராமணி வேண்டாம். பிராமணன்-பிராமணி என்றால் அவர் களின் வாயில் கீதை ஞானம் மனப்பாடமாக இருக்க வேண்டும். பிராமணர்களிலும் நம்பர்வாரோ இருக்கவே செய்கின்றனர். இங்கேயும் கூட அதுபோல் உள்ளனர். படிப்பின் மீது கவனம் இல்லையென்றால் போய் என்னவாக ஆவார்கள்? ஒவ்வொருவரும் அவர்களாகவே புருஷார்த்தம் செய்ய வேண்டும். சேவையின் நிரூபணத்தைக் காட்ட வேண்டும். அப்போது தான் இவர்கள் இப்படிப்பட்ட பதவி பெறுவார்கள் என்று புரிந்து கொள்ள முடியும். பிறகு அது கல்ப- கல்பாந்தரத்துக்கும் அதுபோல் ஆகிவிடும். படிக்கவும் படிப்பிக்கவும் செய்யவில்லை என்றால் உள்ளுக்குள் புரிந்து கொள்ள வேண்டும்-நான் முழுமையாகப் படிக்கவில்லை, அதனால் மற்றவர் களுக்குப் படிப்பிக்க முடிய வில்லை என்று. பாபா கேட்கிறார், படிப்பைச் சொல்லிக் கொடுப்பதற்குத் தகுதியுள்ளவராக ஏன் நீங்கள் ஆவதில்லை? எதுவரை பிராமணியை அனுப்பிக் கொண்டிருப் பார்கள்? உங்களுக்குச் சமமாக மற்றவர்களை ஆக்கவில்லை. எங்கே நன்றாகப்

படிக்கின்றனரோ, அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அநேகருக்கு அவர்களுக்குள் அபிப்பிராய பேதம் இருக்கிறது. சிலர் பிறகு ஒருவர் மற்றவர் மீது கவர்ச்சியாகி படிப்பை விட்டு விடுகின்றனர். யார் செய்கிறாôகளோ, அவர்கள் அடைவார்கள். ஒருவர் மற்றவரின் விஷயங்களில் வந்து நீங்கள் ஏன் படிப்பை விட்டு விடுகிறீர்கள்? இதுவும் டிராமா. அதிர்ஷ்டத்தில் இல்லை. நாளுக்கு நாள் படிப்பு வேகமாகிக் கொண்டே போகிறது. சென்டர்களைத் திறந்து கொண்டே செல்கின்றனர். இது சிவபாபா வின் செலவு கிடையாது. எல்லாமே குழந்தைகளின் செலவு தான். இந்த தானம் அனைத்தையும் விட நல்லதாகும். அந்த தானத்தினால் அல்பகால சுகம் கிடைக்கிறது. இதனால் 21 பிறவி களுக்கான பலன் கிடைக்கின்றது. நீங்கள் அறிவீர்கள், நாம் இங்கே வருவது நரனிலிருந்து நாராயணன் ஆவதற்காக. ஆகவே யார் நல்லபடியாகப் படிக்கிறார்களோ, அவர்களைப் பின்பற்றுங் கள். எவ்வளவு ரெகுலராகப் படிக்க வேண்டும்! அடிக்கடி தேக அபிமானத்தில் வந்து அநேகர் சண்டையிட்டுக் கொள்கின்றனர். தங்களுடைய அதிர்ஷ்டத்தைக் கெடுத்துக் கொள்கின்றனர். பெரும்பான்மை அதிர்ஷ்டம் மாதாக்களுடையது. பெயரும் கூட மாதர்களுடையது புகழ் பெறு கின்றது. டிராமாவில் மாதர்களின் உயர்வும் கூட விதிக்கப் பட்டுள்ளது.

ஆக, பாபா இனிமையிலும் இனிமையான குழந்தைகளுக்குச் சொல்கிறார், தன்னை ஆத்மா என உணர்ந்து என்னை மட்டுமே நினைவு செய்யுங்கள். ஆத்ம அபிமானி ஆகி இருங்கள். சரீரமே இல்லை என்றால் மற்றவர் சொல்வதை எப்படிக் கேட்பார்கள்? இதைப் பக்காவாக அப்பியாசம் செய்யுங்கள் - நான் ஆத்மா, இப்போது நான் திரும்பிச் செல்ல வேண்டும். பாபா சொல்கிறார், இவை யனைத்தையும் தியாகம் செய்யுங்கள், பாபாவை நினைவு செய்யுங்கள். இதன் மீது தான் எல்லா ஆதாரமும் உள்ளது. பாபா சொல்கிறார், தொழில் முதலியவற்றைச் செய்து கொண்டே இருங்கள். 8 மணி நேரம் வேலை, 8 மணி நேரம் ஓய்வு, மீதி 8 மணி நேரம் இந்த (ஈஸ்வரிய) அரசாங்கத்தின் சேவை செய்யுங்கள். இதுவும் நீங்கள் செய்வது எனக்காக அல்ல, முழு உலகிற்கும் சேவை செய்கிறீர்கள். இதற்காக நேரம் ஒதுக்குங்கள். முக்கியமானது நினைவு யாத்திரை. நேரத்தை வீணாக்கக் கூடாது. அந்த அரசாங்கத்துக்கு 8 மணி நேரம் சேவை செய்கிறீர்கள. அதனால் என்ன கிடைக்கிறது? ஆயிரம் கொடுங்கள், 5000....... இந்த அரசாங்கத்தின் சேவை செய்வதன் மூலம் நீங்கள் பல கோடிக்கு அதிபதி ஆகிறீர்கள். ஆக, எவ்வளவு மனதார சேவை செய்ய வேண்டும்! 8 இரத்தினங்கள் உருவாகியிருக்கிறார்கள் என்றால் நிச்சயமாக 8 மணி நேரம் பாபாவை நினைவு செய்திருப்பார்கள். பக்தி மார்க்கத்தில் அதிகம் நினைவு செய்கின்றனர். நேரத்தை வீணாக்கு கின்றனர். எதுவும் கிடைப்பதில்லை. கங்கா ஸ்நானம், ஜபம் தபம் முதலிய வற்றைச் செய்வதால் தந்தை கிடைப்பதில்லை, அவரிடமிருந்து ஆஸ்தி கிடைப்பதற்கு. இங்கோ உங்களுக்கு பாபாவிட மிருந்து ஆஸ்தி கிடைக்கின்றது. நல்லது.

இனிமையிலும் இனிமையான தேடிக்கண்டெடுக்கப் பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே!

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) ஸ்ரீமத்தை விட்டு ஒருபோதும் மற்றவர்களின் வழிப்படி நடக்கக் கூடாது. தலைகீழான விஷயங்களில் வந்து படிப்பிலிருந்து முகத்தைத் திருப்பிக் கொள்ளக் கூடாது. அபிப்பிராய பேதத்தில் வரக்கூடாது.

2) தன்னை சோதித்துப் பார்க்க வேண்டும், நாம் எங்காவது கவனக்குறைவாக இல்லாதிருக் கிறோமா? படிப்பின் மீது முழு கவனம் உள்ளதா? சமயத்தை வீணாக்காமல் இருக்கிறோமா? ஆத்ம அபிமானி ஆகியிருக்கிறோமா? ஆன்மிக சேவையை மனதார செய்கிறோமா?

வரதானம் : ஆன்மீக அதிகாரத்தின் கூடவே நிர்அகங்காரியாகி சத்திய ஞானத்தை பிரத்யட்ச ரூபத்தில் வெளிப்படுத்தம் உண்மையான சேவாதாரி ஆகுக. எவ்வாறு மரமானது முழுமையான பலன்களை தரும் நிலைக்கு வந்தவுடன் தணிந்திருக்கிறது, அதாவது பணிவாக இருந்து சேவை செய்கிறது அவ்வாறு ஆன்மீக அதிகாரம் உடைய குழந்தை கள் எவ்வளவு பெரிய அதிகாரம் உடையவராக இருந்தாலும், அந்தளவு பணிவாக இருந்து அனைவருக்கும் அன்பானவராக இருப்பார்கள். அல்பகால அதிகாரம் உடையவர்கள் அகங்காரத் தோடு இருப்பார்கள். ஆனால், சத்தியத்தின் அதிகாரம் உடையவர்கள் அதிகாரத்தின் கூடவே அகங்காரம் இல்லாமல் இருப்பார்கள்- இதுவே சத்திய ஞானத்தின் பிரத்யட்ச ரூபமாகும். உண்மையான சேவாதாரியின் உள்மனதில் எவ்வளவு அதிகாரம் இருக்கிறதோ , அந்தளவு அவர் களது பேச்சில் அன்பு மற்றும் பணிவு இருக்கும்.

சுலோகன்: பாக்கியத்திற்கான ஆதாரம் தியாகமாகும், தியாகமின்றி பாக்கியம் கிடைக்காது.